தண்டையார்பேட்டை - புதுவண்ணாரப்பேட்டை இடையே

# மெட்ரோ ரெயில் பாதையில் ரெயில்வே கமிஷனர் ஆய்வு

## டிராலியில் சென்று பார்வையிட்டார்

ராயபுரம், பிப். 5-
சென்னை வண்ணாரப்பேட்டை- திருவொற்றியூர் விம்கோ நகர் இடையே 9.1 கி.மீட்டர் தூரத்துக்கு மெட்ரோ ரெயில் பாதை ரூ.3,770 கோடி செலவில் அமைக்கப்பட்டு உள்ளது.

### 6 நிலையங்கள்

இங்கு சுரங்கப் பாதையில் தியாகராஜர் கல்லூரி, தண்டையார்பேட்டை ஆகிய 2 ரெயில் நிலையங்களும், உயர்த்தப்பட்ட பாதையில் புது வண்ணாரப்பேட்டை, சுங்கச் சாவடி, காலடிப்பேட்டை, திருவொற்றியூர் தேரடி, திரு வொற்றியூர் விம்கோ நகர் ஆகிய 6 மெட்ரோ ரெயில் நிலையங்கள் உள்ளது.

இதில் தற்போது திருவொற்றியூர் தேரடி ரெயில் நிலையம் தவிர மீதம் உள்ள அனைத்து ரெயில் நிலையங்கள் மற்றும் ரெயில் பாதைகள் அமைக்கும் பணி நிறைவடைந்து உள்ளன.

### டிராலியில் சென்று ஆய்வு

இதைத்தொடர்ந்து இந்த மெட்ரோ ரெயில் பாதையில் கடந்த மாதம் இறுதியில் ரெயில்வே பாதுகாப்பு கமிஷனர் ஆய்வு செய்வதாக இருந்தது. பின்னர் பல்வேறு பணிகளால் இது ஒத்தி வைக்கப்பட்டது.

இந்த நிலையில் இன்று காலை மெட்ரோ ரெயில் பாதுகாப்பு கமிஷனர் அபேகுமார் ராய் மற்றும் பாதுகாப்பு துணை கமிஷனர் பிரதீப் யாதவ், மெட்ரோ ரெயில் மேலாண்மை இயக்குனர் ராஜூவ் நாராயண திரிவேதி மற்றும் ராஜேஷ் சதுர்வேதி, மெட்ரோ தலைமை பொது மேலாளர் வி.கே.சிங் ஆகியோர் கொண்ட குழுவினர் டிராலியில் சென்று ஆய்வு செய்தனர்.

தியாகராயர் கல்லூரி, தண்டையார்பேட்டை மற்றும் உயர்த்தப்பட்ட பாதையில் உள்ள புது வண்ணாரப்பேட்டை வரை உள்ள அனைத்து ரெயில் நிலையங்கள் மற்றும் ரெயில் பாதைகளை ஆய்வு செய்தனர்.

### வசதிகள்

குறிப்பாக ரெயில் நிலையங்களில் பயணிகளுக்கு செய்யப்பட்டு உள்ள பாதுகாப்பு வசதிகள், தீ தடுப்பு உபகரணங்கள், டிக்கெட் கவுண்டர்கள், பாதுகாப்பு போன்றவற்றை கேட்டு அறிந்தனர்.

நாளை விம்கோ நகரில் இருந்து புதுவண்ணாரப்பேட்டை வரை உள்ள மெட்ரோ ரெயில் பாதையில் டிராலியில் சென்று ஆய்வு செய்வார்கள். தொடர்ந்து நாளை மறுநாளும் ஆய்வு நடைபெறுகிறது. மொத்தம் 3 நாட்கள் இந்த ஆய்வு பணி நடக்கிறது.

### 14-ந்தேதி

ஆய்வுக்கு பின்னர் பயணிகள் மெட்ரோ ரெயிலை பாதையில் இயக்குவதற்கு சான்றிதழ் வழங்கப்படும். இதன் பிறகு இந்த பாதையில் மெட்ரோ ரெயில் இயக்க தயாராகி விடும்.

வருகிற 14-ந்தேதி சென்னை வரும் பிரதமர் மோடி இந்த மெட்ரோ ரெயில் சேவையை தொடங்கி வைக்க உள்ளார் என்று மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.



வண்ணாரப்பேட்டை மெட்ரோ ரெயில் நிலையத்தில் அதிகாரிகள் ஆய்வு செய்ய வந்தபோது எடுத்தபடம்.